கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 266/2019

வாதி தரப்பு சாட்சி -1 சண்முகவள்ளி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 30.09.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகவள்ளி | கிராமம் | இடையப்பட்டி |
| த/பெ / க/பெ. | நாகராஜன் | தொழில் | கூலி |
| தாலுக்கா | கடவூர் | மதம் | இந்து |
| ஜாதி | தேவர் | வயது | 48 |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடவூரில் நடுத்தெருவில் குடியிருக்கிறேன். வாதி மணிவேல் என்பவருக்கு எத்தனை வயது என்றால் 17 வயது, அவர் இன்று நீதிமன்றம் வந்திருக்கிறாரா என்றால் இல்லை. அவர் தற்போது தரகம்பட்டியில் அரசு கல்லூரில் முதலாம் ஆண்டு பி.காம் படிக்கிறார். நான் குடியிருப்பது எனது சொந்த வீடு. எனது முகவரியை நிரூபிக்க எனது ஆதார் அட்டை , குடும்ப அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பூர்வீகமாக பிறந்தது எந்த ஊர் என்றால் கடவூர் தான். எனது தந்தை, தாய் ஆகியோரும் கடவூர் தான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சமையல் கூலி வேலை மற்றும் 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வேன். எனக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. எனது பெற்றோர் இறந்துவிட்டார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது மகன் படித்து கொண்டிருக்கிறார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கொடுத்துள்ள வம்சாவழி விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
Kulithalai.